# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 301/2018

நாள்: 09.06.2026

பெயர்: மோகன்(பி.வா.சா.1) த/பெ: பக்கிரிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1. பி.வா.சா.1 ஆனது நான் வேறு ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக இதற்கு முன்பு எனது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டு இருந்தேன். அது எந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பி.வா.சா.1 மோசடியாக எற்படுத்திய ஆவணம் என்ற காரணத்தினால் அதன் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலும் வேறு ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ல் குறிப்பிட்டுள்ள பட்டா எண் 1222 எண்ணிற்குரிய பட்டாவை எனது தரப்பு சான்றாகவும் பி.வா.சா.10 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பட்டா சர்வே எண் 93/2A க்கு 1.6 ஏர்ஸ்க்கு 4 சென்ட் பரப்பளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தாமாக முன்வந்து சர்வே எண் 93/2A மற்றும் சர்வே எண் 93/2C ஒன்றாக இருந்தது எனக் கூறுகிறார். அவ்வாறு சர்வே எண் 93/2A மற்றும் சர்வே எண் 93/2C ஒன்றாக இருந்ததாக நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டாவில் 4 சென்ட் தான் உள்ளது என்றும்கிரயபத்திரத்தில் 8 சென்ட் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறது என்றால் சர்வே எண் 93/2A மற்றும் சர்வே எண் 93/2C ஒன்றாக இருந்தது. அதனால் அவ்வாறு குறிப்பிட்டிருந்தேன். நான் கிரயம் வாங்கியது சர்வே எண் 93/2C என்று சாட்சி கூறுகிறார். நான் சர்வே எண் 93/2C ல் கிரயம் பெற்றிருந்தால், விளம்புகை பரிகாரமாக எதிரிடை

கோரிக்கை கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரை மனுவில் சாக்ரடீஸின் மனைவி பெயர் சாந்தி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாந்தியின் தகப்பனார் பெயர் குமாரசாமி என்றால் சரிதான். பி.வா.சா.9 கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று ஆவணம் என்றால் சரிதான். மேற்படி சான்று ஆவணத்தில் UDR ஆ பதிவேட்டில் புல எண் 93/2 ல் 0.17.50 ஏர்ஸ் ஆனது பட்டா எண் 1405 ல் கட்டுப்பட்டது என்றும் மேற்படி பட்டாவானது 1.குமாரசாமி, 2. ராமச்சந்திரன் 3. பாலசுப்ரமியண் 4. நடராஜன் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என பி.வா.சா.ஆ.9 ல் உள்ளது என்றால் சரிதான். 2.நான் 2ம் பிரதிவாதியிடம் கிரயம் வாங்கியதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ஆனது கடந்த 22.12.2009 தேதியில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கான வருவாய் துறை மாதிரி வரைபடம் பி.வா.சா.ஆ.11 என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ள குறிப்புகள் உள்ளது ஆனால் நான் தேதி கவனிக்கவில்லை. சர்வே எண் 93/2A, 93/2B, 93/2C என 13.06.2007 ல் உட்பிரிவு செய்து வரைவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கும் பொழுது தாவா சொத்து சர்வே எண் 93/2A, 93/2C என்பது ஒன்றாக இருக்கும் பொழுது தான் கிரயம் வாங்கினேன் என்று சாட்சிய வாக்குமூலம் அளித்தது என்னுடைய பி.வா.சா.ஆ.11 ஆவது ஆவணத்திற்கு முரண்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சர்வே எண் 93/2B ஆனது தற்போது திருநாவுகரசு என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது எதிர்வழக்குரையை கண்டாலே தாவா சொத்திற்கு நான் வாங்கியதாக சொல்லப்படும் கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லையை கண்டாலே மேற்படி கிரய பத்திரத்தில் நான்கெல்லைகள்

தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வரும் என்றால் சரியல்ல. கோவிந்தசாமியின் மகன் கணேசன் யார் என்று எனக்கு தெரியவில்லை என எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கணேசனுக்கும் எனது பெயருக்கும் மற்றும் எனது அண்ண்ன குணசேகரன் பெயருக்கும் 25.08.2011 ம் தேதியிட்ட கணிணி பட்டா எண் 2581 என்ற எனது தரப்பு பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் கோவிந்தசாமி மகன் கணேசன் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என வருவாய் துறையினரிடம் அதை நீக்க சொல்லி மனு அளித்து அதன் பெயரில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்ட்டதா என்றால் நான் மனு அளித்துள்ளேன் அதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இதற்கு மேற்பட்டு நானே வருவாய் துறையில் மனு கொடுத்ததாக ஒரு மனுவை உருவாக்கி கொண்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக இவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது ஊருக்கும் மேலக்குடியிருப்பு கிராமத்திற்கும் ஒரே எல்லை என்றால் சரிதான். மேற்படி 2 ஊரும் பக்கத்து ஊர் தான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ஆனது கணேசன் எங்கு வேலை செய்கிறார் என்பதை காண்பிப்பதற்கான ஆவணம் என்றால் ஜெயங்கொண்டம் உழவர் பணி கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக கணேசனை அறிமுகப்படுத்தியது சாக்ரடீஸ் என்பதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்த ஆவணம். மேற்படி கணேசனுக்கு அந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் சரிதான். எனவே கணேசன் யார் என்று எனக்கு தெரியாது என்று கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுவது என்றால் சரியல்ல. மேற்படி கணேசன் எந்த ஊர் எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்ற விபரம் அதில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள

பி.வா.சா.ஆ.3 என் பெயரிலும் என் அண்ணன் குணசேகரன் பெயரிலும் தாவா சொத்தில் அத்துமீறி நுழையக்கூடாது என சாக்ரடீஸ் தாக்கல் செய்த வழக்கு எண் 88/2012 என்றால் சரிதான். அந்த வழக்கு வாதியின் வருகையின்மைக்காக 12.07.2018 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை தான் எனது தரப்பு பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 (சாக்ரடீஸ் என்பவர் மீது உள்ள குற்றச்சாட்டின் நகல்) ல் வாதி கண்ணகி ஒரு தரப்பினராக இல்லாத காரணத்தினால் அதில் உள்ள சங்கதிகள் எதுவும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3.பி.வா.சா.ஆ.7 (சாக்ரடீஸ் மனைவி சாந்தி பெயருக்கு கோவிந்தசாமி மகன் கணேசன் எழுதி கொடுத்த கிரய பத்திரம்) வாதி ஒரு தரப்பினராக இல்லை என்பதனால் இந்த ஆவணம் அவரை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தாமாக முன்வந்து வாதி சாக்ரடீஸின் அக்கா என்றும் அசல் வழக்கு 88/2012 என்பது தள்ளுபடி ஆன காரணத்தினால் தனது அக்கா பெயரில் தானசெட்டில்மென்ட் எழுதி வைத்து புதிய வழக்கை சாக்ரடீஸ் தாக்கல் செய்துள்ளார் என கூறுகிறார். நான் இவ்வாறு வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சான்றாவணம் பி.வா.சா.ஆ.7 ல் ஒரு சென்டுக்கு கிரயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 ல் இருந்து சாக்ரடீஸ் மனைவி சாந்தியின் தந்தை குமாரசாமிக்கு தாவா சொத்தில் 8 சென்ட் உரிமை உள்ளது என்றும் அதன் அடிப்படையில் மேற்படி சாந்திக்கு தாவா சொத்து கிடைக்கபெற்று அதன் பெயரில் தன் கணவருக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றும் மேற்படி சாக்ரடீசும் தனது உடன்பிறந்த சகோதரிக்கு தானசெட்டில்மென்ட் எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே தாவா சொத்து உட்பிரவு

செய்யப்பட்டு அதன் பெயரில் சாக்ரடீஸ் மனைவி சாந்தி பெயரில் வருவாய் துறை ஆவணம் ஏற்பட்டு சாந்தி தனது கணவர் சாக்ரடீஸ்க்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்ததற்கு பின்பு சாக்ரடீஸ் வாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. சாக்ரடீஸ் என் பெயரில் சில வழக்குகள் தாக்கல் செய்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தாவா சொத்ததை எழுதி கொடுக்கவே உரிமை இல்லாத ஒரு நபரிடம் கிரயம் பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் வாதிக்கு உரிமை உள்ள தாவா சொத்தில் வாதியின் உரிமையிலும் அனுபவத்திலும் நான் தொந்தரவு செய்து வந்த காரணத்தினால் வாதி நீதிமன்றத்தை நாடி மட்டும் தான் பரிகாரம் பெற முடியும் என்ற காரணத்தினால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–மோகன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்